மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.02/2023
அ.வ.எண்.19/2023

1. பழனிசாமி
2. பாக்கியம்
3. மங்கம்மா
4. ராஜி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. கணேசன்
2. ஜோதிபால் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 20.12.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.கோபிநாத் மற்றும் திருமதி.M.அபிநயா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதிகள்/மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 1வது அயிட்ட சொத்து மனுதாரர்களுக்கு பரம்பரையாக பாத்தியப்பட்ட பொது சொத்தாகும். தாவா 1வது அயிட்ட சொத்தில் 25 வருடங்களுக்கு முன்பு ஊர் பொதுமக்களால் மாரியம்மன் கோவில் கட்டப்பட்டு, கோவில் கமிட்டியால் நிர்வாகம் செய்யப்பட்டு

வருகிறது. மேலும் 1வது அயிட்ட சொத்தில் மனுதாரர்கள் பைப்லைன் அமைத்துள்ளனர். மேலும் தாவா 2வது அயிட்ட சொத்து 1ம் மனுதாரருக்கு கிரயத்தின் மூலம் பாத்தியப்பட்டு, அதில் 1ம் மனுதாரர் வீடு கட்டி வசித்து வருகிறார்.

(ii) தாவா 2வது அயிட்ட சொத்திலுள்ள தங்களின் வீட்டிற்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் வாசலின் வழியாகத்தான் மனுதாரர்கள் செல்ல இயலும். இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் கோயில் நிர்வாக கமிட்டியில் உறுப்பினராக இருந்தபோது செய்த முறைகேடுகள் குறித்து மனுதாரர்கள் கேட்டதால், விரோதம் கொண்ட எதிர்மனுதாரர்கள் மனுதாரர்கள் செல்லும் வழித்தடத்தில் பொங்கல் வைத்து தாவா சொத்துக்களை மனுதாரர்கள் அனுபவிப்பதற்கு பல்வேறு வகையில் இடையூறு செய்து வந்தனர். இந்நிலையில் கடந்த 18.01.2023ம் தேதியில் மனுதாரர்களின் வீட்டிற்கும், கோவிலுக்கும் இடையே சுவர் எழுப்ப மணல், கற்கள் ஆகியவற்றை எதிர்மனுதாரர்கள் கொட்டினர். எனவே மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:–</u>

<u>(குறிப்பாணையின் பேரில் பதிலுரை இம்மனுவின் எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. தாவா 1, 2வது அயிட்ட சொத்துக்களின் பேரிலுள்ள மனுதாரர்களின் உரிமையையும், தாவா 1வது அயிட்ட சொத்தில் சுமார் 25 ஆண்டுகளாக மாரியம்மன் கோவில் உள்ளதையும், அதை கோவில் கமிட்டி நிர்வாகம் செய்வதையும் மனுதாரர்களே தக்க ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும். 1ம் எதிர்மனுதாரர் கோயில் நிர்வாகத்தில் முறைகேடுகள் செய்ததாக கூறுவது தவறானதாகும்.

(ii) மேலும் கடந்த 18.01.2023ம் தேதியில் மனுதாரர்களின் வீட்டிற்கும், கோயிலுக்கும் இடையே சுவர் எழுப்ப போவதாக கூறி மணல், கற்களை எதிர்மனுதாரர்கள்

கொட்டியதாக கூறுவது பொய்யானதாகும். உண்மையில் மேற்படி மாரியம்மன் கோவில் திருவிழாவின் போது கோவிலில் பொங்கல் வைக்கும் இடங்களை மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு கோவிலுக்கு வருபவர்களுக்கு பலவித இடையூறுகளை செய்துவந்தனர். இதை நிர்வாகஸ்தர்களான எதிர்மனுதாரர்கள் கேட்டதால் பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். தாவா 1வது அயிட்ட ச.எண்.612/2C1 சொத்தானது பச்சமுத்தியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி பச்சமுத்தியம்மாள் தன் வாரிசுகளை உள்ளடக்கி 1957ம் ஆண்டு மாரியம்மன் கோவில் கட்டுவதற்காக 36 நபர்கள் பேரில் பொதுவாக கிரயம் செய்து கொடுத்தனர்.

(iii) பின்னிட்டு மாரியம்மன் கோவில் கட்டப்பட்டுள்ளது. தாவா 2ம் அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள ச.எண்.612/2C3 என்பது மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பது தவறாகும். மேற்படி ச.எண்.612/2C3ன் பட்டா மனுதாரர்கள் பெயரில் தவறாக வழங்கப்பட்டுவிட்டது. அதுகுறித்து கோவில் சார்பாக வருவாய்துறையில் முறையீடு செய்யப்பட்ட மனு நிலுவையில் உள்ளது. மேற்படி பட்டாவை கொண்டு சொத்து தங்களுடையது என கூற மனுதாரர்களுக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. தாவா சொத்தானது கோவிலுக்கு பாத்தியப்பட்டதாகும்.

(iv) மனுதாரர்களின் பழைய வீடு கிழக்கு வாசல் வைத்து கட்டப்பட்டுள்ளது. மேற்படி வழியாக மட்டுமே இதுநாள்வரை பயன்படுத்திவந்தனர். தற்போது 2021ம் ஆண்டு மனுதாரர்கள் புதிதாக கட்டிய வீட்டிற்கு வேண்டுமென்றே கோவில் நிலத்தின் பேஸ்மெண்ட் கற்களை பிடிங்கி எடுத்துவிட்டு, அதில் வாசல் படிகட்டு கட்டியுள்ளனர். மனுதாரர்களுக்கு அவர்கள் நிலத்திற்கு கிழபுறத்தில் சாலை வசதி உள்ளது. மனுதாரர்களின் வழக்கில் எந்த ஒரு சம நோக்கும், சம வாய்ப்பும் இல்லை. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில்

சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் தாவா 1வது அயிட்ட சொத்து மனுதாரர்களுக்கு பரம்பரையாக பாத்தியப்பட்ட பொது சொத்து என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தில் 25 வருடங்களுக்கு முன்பு ஊர் பொதுமக்களால் மாரியம்மன் கோவில் கட்டப்பட்டு, கோவில் கமிட்டியால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது என்றும், மேலும் தாவா 2வது அயிட்ட சொத்து 1ம் மனுதாரருக்கு கிரயத்தின் மூலம் பாத்தியப்பட்டு, அதில் 1ம் மனுதாரர் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றும், தாவா 2வது அயிட்ட சொத்திலுள்ள தங்களின் வீட்டிற்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் வாசலின் வழியாகத்தான் மனுதாரர்கள் செல்ல இயலும் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் கோயில் நிர்வாக கமிட்டியில் உறுப்பினராக இருந்தபோது செய்த முறைகேடுகள் குறித்து மனுதாரர்கள் கேட்டதால், விரோதம் கொண்ட எதிர்மனுதாரர்கள் மனுதாரர்கள் செல்லும் வழித்தடத்தில் பொங்கல் வைத்து தாவா சொத்துக்களை மனுதாரர்கள் அனுபவிப்பதற்கு பல்வேறு வகையில் இடையூறு செய்து வந்தனர் என்றும், மேலும் கடந்த 18.01.2023ம் தேதியில் மனுதாரர்களின் வீட்டிற்கும், கோவிலுக்கும் இடையே சுவர் எழுப்ப மணல், கற்கள் ஆகியவற்றை எதிர்மனுதாரர்கள் கொட்டினர் என்றும், எனவே மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மாரியம்மன் கோவில் திருவிழாவின் போது கோவிலில் பொங்கல் வைக்கும் இடங்களை மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு கோவிலுக்கு வருபவர்களுக்கு பலவித இடையூறுகளை செய்துவந்தனர் என்றும், இதை நிர்வாகஸ்தர்களான எதிர்மனுதாரர்கள் கேட்டதால் பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும், தாவா 1 வது அயிட்ட ச.எண்.612/2C1 சொத்தானது பச்சமுத்தியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு, 1957 ம் ஆண்டு மாரியம்மன் கோவில் கட்டுவதற்காக 36 நபர்கள் பேரில் பொதுவாக கிரயம் செய்து கொடுத்ததற்கு பின்னிட்டு மாரியம்மன் கோவில் கட்டப்பட்டுள்ளது என்றும், தாவா 2 ம் அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள ச.எண்.612/2C3 என்பது மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பது தவறானது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) மேற்படி ச.எண்.612/2C3 ன் பட்டா மனுதாரர்கள் பெயரில் தவறாக வழங்கப்பட்டது என்றும், அதுகுறித்து கோவில் சார்பாக வருவாய்துறையில் முறையீடு செய்யப்பட்ட மனு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி பட்டாவை கொண்டு சொத்து தங்களுடையது என கூற மனுதாரர்களுக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், மனுதாரர்களின் பழைய வீடு கிழக்கு வாசல் வைத்து கட்டப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழியாக மட்டுமே இதுநாள்வரை பயன்படுத்தி வந்தனர் என்றும், தற்போது 2021 ம் ஆண்டு மனுதாரர்கள் புதிதாக கட்டிய வீட்டிற்கு வேண்டுமென்றே கோவில் நிலத்தின் பேஸ்மெண்ட் கற்களை பிடிங்கி எடுத்துவிட்டு, அதில் வாசல் படிகட்டு கட்டியுள்ளனர் என்றும், மனுதாரர்களுக்கு அவர்கள் நிலத்திற்கு கிழபுறத்தில் சாலை வசதி உள்ளது என்றும், மனுதாரர்களின் வழக்கில் எந்த ஒரு சம நோக்கும், சம வாய்ப்பும் இல்லை என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(v) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்துகளுக்கு செல்லும் தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதற்கும், தாவா சொத்துகளிலுள்ள மனுதாரர்களின் அனுபவத்திற்கும் எதிர்மனுதாரர்கள் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது எனவும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது மனுதாரர்களின்

வீட்டிற்கு எதிரே ஏற்படுத்தப்பட்ட மதில் சுவற்றை அகற்ற வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வாதிகள்/மனுதாரர்களால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்கள் மனுதாரர்களுக்கு உரிமைப்பட்டதல்ல எனவும், மனுதாரர்கள் தான் 2021ம் ஆண்டில் புதிதாக வீடு கட்டிய போது கோவில் நிலத்தின் பேஸ்மெண்ட் கற்களை பிடிங்கி எடுத்துவிட்டு, அதில் வாசல் படிகட்டு கட்டியுள்ளனர் என்றும், மனுதாரர்களுக்கு அவர்கள் நிலத்திற்கு கிழபுறத்தில் சாலை வசதி உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vi) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர்களால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில், இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது தாவா சொத்துக்களின் பேரிலுள்ள தனது சட்டப்படியான சுவாதீன அனுபவத்தை மனுதாரர்கள் நிரூபித்துள்ளனரா? என்பதும், தாவா சொத்துக்களிலுள்ள தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தனரா? என்பதும், எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல் மனுதாரர்கள் மாரியம்மன் கோவில் நிலத்தை ஆக்கிரமித்து அனுபவித்து வருவதாக எதிர்மனுதாரர்கள் நிரூபித்துள்ளனரா? என்பதுமே ஆகும்.

(viii) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும்

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(ix) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம்

ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.29 17:21:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 11.05.2015 பட்டா எண்.1930 ன் கணிணி பட்டா | கணிணிநகல் |
| ம.சா.ஆ.2 | 23.01.2023 பட்டா எண்.2955 ன் கணிணி பட்டா | கணிணிநகல் |
| ம.சா.ஆ.3 | வீட்டுவரி ரசீதுகள் (3 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.4 | 18.01.2023 புகார் மனு | நகல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 17.01.1957 கிரயப்பத்திரம் | பதிவுநகல் |
| எ.ம.சா.ஆ.2 | 13.02.2023 வில்லங்க சான்றிதழ் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.3 | 14.02.2023 வில்லங்க சான்றிதழ் | சான்றிட்டநகல் |
| எ.ம.சா.ஆ.4 | 25.01.2023 மனு ரசீது | சான்றிட்டநகல் |

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.29 17:21:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.